**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No: 195/2023** **நாள் 05.03.2026.**

**வாசா.1, திரு.பரமசிவம் நாடார்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1, 3, 4 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்–**

பிராது சொத்துக்களை நாங்களும் வழக்கில் உள்ள 2 மற்றும் 3 எதிர்வாதிகளும் சேர்ந்து பொதுவாக கூட்டு அனுபவத்தில் உள்ளதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் அப்படியில்லை. 1 ஏக்கர் 61 1/2 சென்ட் நிலம் பார்வதியம்மாளுக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவத்தில் உள்ளதாக நான் வழக்கில் சொல்லியுள்ள போது பார்வதியம்மாள் பெயரிலான பட்டா மற்றும் பத்திரங்கள் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றுகேட்டால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அதுபோல் 1 ஏக்கர் 24 சென்ட்நிலமும் நான் அனுபவித்து வருவதாக சொல்லும்போது அந்த நிலத்திற்கான பட்டா மற்றும் பத்திரம் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அப்படியில்லை . பிராது தபசில் சொத்திற்குண்டான எந்தவிதமான ஆவணங்களும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்லை. நானும் வழக்கில் உள்ள 2 மற்றும் 3 வாதிகளும் சேர்ந்து பிராது சொத்துக்களில் கிணறு வெட்டி மின்இணைப்பு செய்து தேக்குமரங்களும், தென்னை மரங்களும், கொய்யா மரங்களும் வைத்துஅனுபவித்து வருவதாக இந்த வழக்கிற்காக வேண்டி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல. பழைய பட்டா எண்.772 யை லட்சுமியம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்பதற்கான பட்டாவை நான் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் சொத்தானது எங்களுகுரிய சொத்து எங்களுக்கு தெரியாமல் லட்சுமியம்மாள் பட்டா வாங்கியுள்ளார். பட்டா எண்.772 என்பது கிடையாது என்றும் நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. பிரதிவாதிகளின் தாயார் பார்வதியம்மாள் அவருடைய கணவர் மாடசாமி என்பவர் கோவிலில் இருந்த சிலையை திருடிவிட்டு அவர் மீது வழக்கு பதியப்பட்டதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் அப்படியில்லை. 1 முதல் 3 எதிர்வாதிகளின் தாயார் பார்வதியம்மாள் பிராது சொத்துக்களை தனக்கு பாத்தியப்பட்டு தன்னுடைய சுவாதீன அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் அப்படியில்லை நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். பிராது சொத்துக்கள் வழக்கில் உள்ள 1 முதல் 3 எதிர்வாதிகளின் தாயார் பார்வதியம்மாளுக்கு பூர்வீகமாகவும், சுயார்ஜ்ஜிதமாகவும் பாத்தியப்பட்டிருந்து வழக்கில் உள்ள 1 முதல் 3 எதிர்வாதிகளின் தனித்த சுவாஜித அனுபவத்தில் உள்ளது என்றால் அது சரியல்ல. பிராது சொத்துக்கு லட்சுமியம்மாள் பெயரில் 50 ஆண்டுக்கு முன்பு இருந்தே பட்டா பெற்று அவர் தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் அது சரியல்ல. பிராது சொத்துக்களுக்கு இன்று வரையிலும் லட்சுமியம்மாள் பெயரில் தான் செட்டில்மெண்ட் ரிஸிஸ்டர் ஆவணம் உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. பிராது சொத்துக்கள்லட்சுமியம்மாளுக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வந்து தன்னுடைய 3 பெண்மக்களான 1 முதல் 3 எதிர்வாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக பாத்தியப்படுத்தி எழுதிக்கொடுத்துள்ளார் என்றும்பிராது சொத்துக்கள் 1 முதல் 3 எதிர்வாதிகளின் தனித்த சுவாதீன அனுபவித்தில் உள்ளது என்றால் அது சரியல்ல. வழக்கில் உள்ள 5ம் எதிர்வாதி

முறையாக விசாரணை மேற்கொண்டு வழக்கில் உள்ள 1 முதல் 3 எதிர்வாதிகளுக்கு பட்டா வழங்கியுள்ளார் என்றால் அது சரியல்ல. 1ம் எதிர்வாதியனாவர் தனக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம்மூலமாக கிடைக்க பெற்ற சொத்தை 4ம் எதிர்வாதிக்கு முறையாக கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்து 4ம் எதிர்வாதிக்கு தனித்த அனுபவத்தில் பிராது சொத்துக்கள் உள்ளதுஎன்று சொன்னால் அது சரியல்ல. கிரையம் பெற்ற 4ம் எதிர்வாதியானவர் அவர் பெயரில் பட்டா ஏற்பட்டு பிராது சொத்தானதை அவர் தனித்த சுவாதீன அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் அது சரியல்ல. பட்டா கொடுத்தது செல்லாது என்று நாங்கள் மனு கொடுத்துள்ளோம். பிராது சொத்துக்கும் என் மாமியார் பார்வதியம்மாளுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் பாத்தியமும் உரிமையும் அனுபவமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. எந்த காலத்திலும் எப்போதும் பிராது சொத்துக்களை பார்வதியம்மாள் அனுபவித்து வரவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. 70 ஆண்டு காலமாக நாங்கள் தான் கிணறு வெட்டி விவசாயம் செய்து பிராது சொத்தை அனுபவித்து வருகிறோம். பிராது சொத்துக்கள் பார்வதியம்மாள் பெயரில் எந்த ஆவணங்களும் இல்லை என்பதால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல.பிராது சொத்துக்களை 1 முதல் 4 எதிர்வாதிகள் அனுபவித்து வருவதை நானும், 2, 3 வாதிகளும் இடையூறு செய்து வருகிறோம் என்று சொன்னால் அது சரியல்ல. 1 முதல் 3 எதிர்வாதிகள் எனக்கு எதிராக சேத்துார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் நாங்களும் கொடுத்தோம். சேத்துார் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரித்து 1 முதல் 3 எதிர்வாதிகளின் அனுபவத்திற்கு நான் இடஞ்சல் செய்யக்கூடாதுஎன்று சொல்லி என்னிடம் எழுதி வாங்கினார்களா என்று கேட்டால் அப்படி எதுவும் நடக்கவில்லை . காவல் நிலையத்தில் விசாரித்து என்னை எச்சரித்து அனுப்பினார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தை யார் கிரையம் வாங்கியது என்று கேட்டால் என் மாமியார் கிரையம் வாங்கினார். வாசாஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தை யார் யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்று கேட்டால் என் மாமியார் பார்வதியம்மாள் என்பவர் சிவகிரி கணக்குப்பிள்ளையிடமிருந்து மொத்த சொத்தையும் விலைக்கு வாங்கி பார்வதியம்மாளுக்கு ஒரே மகளான மாரியம்மாளை என்னை திருமணம் செய்து வைத்தார்கள். வாசாஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்து சிவகிரி கணக்குபிள்ளைக்கு எப்படி பாத்தியம் என்று அந்த ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. சிவகிரி கணக்குபிள்ளை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கான ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. வாசாஆ.1 ஆவணத்தின் அசல் கிரைய பத்திரம் யாரிடம் உள்ளது என்று கேட்டால் என்னிடம் தான் உள்ளது. அந்த அசல் கிரைய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்று கேட்டால் அசல் பத்திரத்தை என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அந்த அசல் கிரைய பத்திரமானது என் கைவசம்இல்லை என்றும் அவ்வாறு இருந்திருந்தால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொன்னால் அப்படியில்லை. 1974ம்ஆண்டு என் மாமியார் பார்வதியம்மாள் என்ன என்ன சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்று கேட்டால் 3 ஏக்கர் 23 சென்டை அவர் கிரையம் வாங்கினார் அவரது ஒரே மகளான மாரியம்மாளை எனக்கு திருமணம் செய்து வைத்தார் . நானும், என் மக்களும் தான் இந்த 3 ஏக்கர் 23 சென்டை அனுபவித்து வருகிறோம்.இந்த 3 ஏக்கர் 23 சென்ட் நிலத்தைத் என் மாமியார் பார்வதியம்மாள் கிரையம் வாங்கவில்லை என்றும்அவர் அனுபவிக்கவும் இல்லை என்று சொன்னால் அதுசரியல்ல. வாசாஆ.1 ஆவணமானதை

கடந்த 26.07.2023ம் தேதி தான் நகல் எடுத்துள்ளேன் என்றால் சரிதான்.மேற்படி ஆவணமானது இந்த வழக்கிற்காக வேண்டி எங்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் அது சரியல்ல. வாசாஆ.1 ஆவணப்படிக்கு 3 ஏக்கர் 23 சென்டை மட்டுமே என் மாமியார் கிரையம் வாங்கினார். வாசாஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்துக்கும் தாவா பிராதில் கண்ட சொத்துக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. அசல் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் உண்மை விபரம் தெரியவரும் என்று சொன்னால் அது சரிதான். அசல் ஆவணத்தை என் வழக்கறிஞர் குமார் என்பவரிடம் கொடுத்துள்ளேன். வாசாஆ.1 ஆவணத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் சொக்கநாதன்புத்தூர் கிராமத்தில் பார்வதியம்மாள் குடியிருந்து வருவதாக அதில் சொல்லியுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.2 உயில் ஆவணமானது என் மாமியார் பார்வதியம்மாள் எழுதி வைத்தது ஆகும். மேற்படி உயில் ஆவணத்தில் சொக்கநாதன்புத்தூர் கிராமத்தில் குடியிருந்து வரும் பார்வதியம்மாள் என்று தான் சொல்லியுள்ளது என்றால் ஆமாம். மேற்படி உயில் ஆவணத்தில் எத்தனை சொத்துக்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் அந்த 3 ஏக்கர் 23 சென்ட் மட்டும் தான் எழுதப்பட்டுள்ளது. வாசாஆ.2 உயில் ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் பார்வதியம்மாளுக்கு எப்படி பாத்தியம் என்று சொல்லப்படவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. உயில் எழுதும் போது பார்வதியம்மாளுக்கு வயது என்ன இருக்கும் என்று கேட்டால் வயது 75 இருக்கும். அவர் உயில் எழுதும் போது மிகவும் உடல் நிலை சரியில்லாமல் தான் இருந்தார் என்றால் சரிதான். பார்வதியம்மாளுக்கு அன்றாட கடமையை செய்வதற்கும் ஒரு ஆள் துணையில்லாமல் செய்யமுடியாது என்றால் சரிதான். உயில் எழுதும் சமயத்தில் நானும் என் மாமியாரும் ஒன்றாக தான் இருந்தோம். அந்த உயில் ஆவணத்தில் யார் யார் சாட்சி கையொப்பங்களை செய்துள்ளார்கள் என்றுகேட்டால் எனக்கு தெரியவில்லை. பார்வதியம்மாளுக்கு எழுத படிக்க தெரியாது. கைரேகை தான் வைப்பார். உயில் ஆவணத்தை முனியாண்டி தேவர் என்பவர் எழுதினார். அந்த உயில் ஆவணத்தை முனியாண்டி தேவர் எழுதும் போது நானும் உடனிருந்து சொன்னேன். வாசாஆ.2 உயில் ஆவணத்தில் கண்ட சொத்துக்கும் பிராது தபசில் சொத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.2 உயில் ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்று கேட்டால் அசல் என் மகனிடம் உள்ளது ஜெராக்ஸ் நகல் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அந்த அசல் உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துகொள்ள நான் தயாராக உள்ளேன். வாசாஆ.2 அசல் உயில் ஆவணத்தின் நகலை கடந்த 13.06.2023ம் தேதி தான் சேத்தூர் சார்பதிவக அலுவலத்தில் இருந்து பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1986ம் ஆண்டு உயில் ஆவணம் எழுதியதாக சொல்லும்போது இத்தனை ஆண்டு காலம் வரையிலும் இந்த உயில் ஆவணத்தை வெளியில் எடுக்காததற்கு என்ன காரணம் என்று கேட்டால் இந்த அசல் உயில் ஆவணமானதை எங்கள் மகன்களுக்கு எழுதிக்கொடுத்ததால் இத்தனை ஆண்டு காலம் வைத்துக்கொண்டோம். அசல் உயில் ஆவணம் எங்களிடம் கிடையாது என்றும் அதன் நகல் எடுத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது சரியல்ல. வாசாஆ.3 ஆவணமானது என் மாமியாரின் இறப்பு சான்றாகும். மேற்படி இறப்பு சான்றிதழை 16.08.2018ம் தேதியில் தான் சேத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து நகலை எடுத்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். பார்வதியம்மாள் இறந்து போய் 17 ஆண்டு கழித்து தான் 16.08.2018ம் தேதியில் நகல்

வாங்கினோம் என்றால் சரிதான். வாசாஆ.3 ஆவணத்தில் பார்வதியம்மாளின் அப்பா, அம்மா பெயர் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அது போல் பார்வதியம்மாளின் பெயருக்கு முன்னாடி இனிசியல் போடவில்லை என்றால் சரிதான். சொக்கநாதன்புத்தூர் கிராமானது பெரிய கிராமம் தான். அந்த ஊரில் நிறைய தெருக்கள் உள்ளது. வாசாஆ.3 ஆவணத்தில் பார்வதியம்மாள் இறந்துபோனது முதலியார் தெரு சொக்கநாதன்புத்தூர் கிராமம் என்று உள்ளது என்றால் சரிதான். அவர் எப்படி இறந்தார் என்று வாசாஆ.3 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.3 இறப்பு சான்றானதை வழக்கிற்காக வேண்டி உற்பத்தி செய்து நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது சரியல்ல. வாசாஆ.4 ஆவணமாக பார்வதியம்மாளின் வாரிசு சான்றாக தாக்கல் செய்துள்ளேன் அவருக்கு ஒரே வாரிசு மாரியம்மாள் தான். வாரிசு சான்றிதழ் நகலை 2023 ம் ஆண்டு தான் வாங்கியுள்ளேன். மேற்படி வாசாஆ.4 வாரிசு சான்றிதழில் கதவு எண்.3/220, யாதவ தெற்கு தெரு என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வதியம்மாளின் கணவர் பெயர் அடித்து எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் மாரியம்மாளின் கணவர் பெயர் உத்திரமாடன். பார்வதியம்மாள் அப்பா பெயர் மாடசாமி நாடார். வாசாஆ.4 ஆவணத்தையும் காலங்கடந்து நாங்கள் உற்பத்தி செய்துள்ளோம் என்று சொன்னால் அது சரியல்ல. மாரியம்மாளின் வாரிசுகளாக என்னையும் சேர்த்து 5 பேர் என்று வாசாஆ.6 ஆவணத்தில் சொல்லியுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் என் மகள்களான சுமதி, ரோஜா ஆகியோர்களை சேர்க்கவில்லை என்றால் சரிதான். வாசாஆ.18 ஆவணமானதை வழக்கிற்காக வேண்டி எங்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.18 ஆவணப்படிக்கு விசாரணை மேற்கொண்டு பிராது சொத்துக்கள் பிரதிவாதிகளுக்குரியது என்றும் நீதிமன்றத்திற்கு போய் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். வாசாஆ.19 மற்றும் வாசாஆ.20 ஆவணங்கள் வழக்கிற்காக வேண்டி உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் அது சரியல்ல. வாசாஆ.17 ஆவணமாக பிராது சொத்தின் 1 வது அயிட்டத்தை பொறுத்து 4 ம் பிரதிவாதி பெயருக்கு 5 ம் எதிர்வாதியானவரால் வழங்கப்பட்ட பட்டாவாக தாக்கல் செய்துள்ளேன் அந்த பட்டாவானதை 5 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதிக்கு எங்களுக்கு தெரியாமல் கொடுத்துள்ளார். வாசாஆ.13 முதல் வாசாஆ.15 வரையிலான பட்டாக்களும் 2 ம் பிரதிவாதிக்கு 5 ம் பிரதிவாதியால் வழங்கப்பட்டதாக உள்ளது என்று சொன்னால் அது சரிதான். வாசாஆ.10 முதல் 12 வரையலான ஆவணங்களில் கண்ட சொத்தை பொறுத்து பார்வதியம்மாள் 1 முதல் 3 எதிர்வா'தி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதிக்கொடுத்துள்ளதாக சொல்லி கொடுத்துள்ளேன். வாசாஆ.16 ஆவணமானது பிராது சொத்தின் 1 வது அயிட்டத்தை 1 ம் பிரதிவாதியானவர் 4 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லி தாக்கல் செய்துள்ளேன். பிராது சொத்துக்கும் என் மாமியார் பார்வதியம்மாளுக்கு எந்தவிதமான சம்மந்தமும், பாத்தியமும், உரிமையும், அனுபவமும் கிடையாது என்றும் பிராது சொத்துக்களை அபகரிக்க வேண்டி பொய்யாக நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் அதுசரியல்ல. பிராதில் கோரிய பரிகாரங்கள் எதுவும் எங்களுக்கு கிடைக்க கூடியதாக இல்லை என்றால் அது சரியல்ல. 1 முதல் 3 எதிர்வாதிகளுக்கு எதிராக நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கானது தள்ளுபடி செய்யப்படக் கூடியது என்று

சொன்னால் அது சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக வேண்டி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல.

**(குறுக்கு விசாரணை 5 முதல் 8 எதிர்வாதிகள் தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 05th day of March 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.